# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:97** **தேதி:-16.02.2016**

## வேலூர் மாநில செயற்குழு முடிவுகள்

அன்பார்ந்த தோழர்களே,

தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கத்தின் மாநில செயற்குழுக் கூட்டம் வேலூரில் உள்ள சரோஜ் இல்லத்தில் 12.02.2016 அன்று மாநில தலைவர் தோழர் S.செல்லப்பா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. மாநிலத் துணைத்தலைவர் தோழர் V.வெங்கட்ராமன் அவர்களின் அஞ்சலி உரைக்கு பின் மாநில செயற்குழு தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தியது. பின்னர் வேலூர் மாவட்ட செயலாளர் தோழர் S.தங்கவேல் வரவேற்புரையாற்றினார். மாநில தலைவரும், அகில இந்திய உதவி பொது செயலாளருமான தோழர் S.செல்லப்பா தலைமையுரை ஆற்றினார். கடந்த காலத்தில் நாம் தமிழகத்தில் ஆற்றிய பணிகளை நினைவுபடுத்திய தோழர் S.செல்லப்பா எதிர்வரும் காலத்தில் நாம் 7ஆவது சங்க அங்கீகார தேர்தலில் தமிழகத்தில் முதன்மை சங்கமாக வருவதற்கான திட்டங்களை நாம் வகுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு தனது துவக்க உரையில் செப்டம்பர் 2 வேலை நிறுத்தம் தொடர்பாகவும், மத்திய அரசின் தவறான பொருளாதார கொள்கைகள் தொடர்பாகவும் விளக்கமாக பேசினார். தற்போது நடைபெற்று வரும் "இன்முகத்துடன் சேவை" 100 நாள் திட்டம் தொடர்பாகவும், அதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், இன்னமும் நாம் செய்ய வேண்டிய பணிகள் தொடரபாகவும் விளக்கினார். மேலும் உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தலுக்கு நாம் ஆற்ற வேண்டிய பணிகள் தொடர்பாகவும், ஊழியர் பிரச்சனைகளை பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தார்.

அதன் பின்னர் மாநில செயலாளர் விவாதக் குறிப்பை அறிமுகப்படுத்தி பேசினார். அந்தக் குறிப்பின் மீது 30 தோழர்கள் தங்களின் கருத்துக்களை எடுத்துரைத்தனர். விவாதங்களுக்கு பின் கீழ்கண்ட முடிவுகள் ஏகமனதாக எடுக்கப்பட்டன.

1. 2015 செப்டம்பர் 2 வேலை நிறுத்தத்தை தமிழகத்தில் வெற்றிகரமாக்கிய அனைத்து தோழர்களுக்கும் மாநில செயற்குழு தனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் உரித்தாக்கிக் கொள்கிறது.
2. தமிழகத்தில் பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரணத்திற்காக பணமாகவும் பொருளாகவும் BSNLல் இருந்து 15 லட்ச ரூபாய்களுக்கு மேல் வழங்கிய BSNL ஊழியர்களுக்கு இந்த மாநில செயற்குழு தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.
3. சென்னை MMDA காலணியை தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்ட அனைத்து ஊழியர்களுக்கும், குறிப்பாக ஒப்பந்த ஊழியர்களுக்கும் இந்த மாநில செயற்குழு தனது பாராட்டுக்களை உரித்தாக்கிக் கொள்கிறது.
4. பெரு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை, கடலூர் மற்றும் பாண்டிச்சேரி ஆகிய மாவட்டங்களுக்கு சரியான நேரத்தில் தலையிட்டு அதற்கான நிதியினை பெற்றுத்தந்த மத்திய சங்கத்திற்கு மாநில செயற்குழு பாராட்டுதலை தெரிவித்துக் கொண்டது.

5. ”இன்முகத்துடன் சேவை”-100 நாள் திட்டத்திற்காக தமிழக FORUM விட்டிருந்த அறைகூவலான ஜாதா நடத்துவது என்ற முடிவை சிறப்பாக அமுலாக்கிய கோவை, சேலம், விருதுநகர், வேலூர் மற்றும் பாண்டிச்சேரி மாவட்ட சங்கங்களுக்கு மாநில செயற்குழு தனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொண்டது.

6. ”இன்முகத்துடன் சேவை” கருத்தரங்கில் பங்கேற்ற தோழர்களுக்கு பாராட்டினை தெரிவித்துக் கொண்ட மாநில செயற்குழு, இதில் சிறப்புரை ஆற்றிய நமது பொது செயலாளர் உள்ளிட்ட அகில இந்திய தலைவர்களுக்கும், CGM உள்ளிட்ட அதிகாரிகளுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டது.

7. 100 நாள் திட்டத்தை முழு வீச்சில் தமிழகத்தில் சிறப்பாக மேற்கொள்ள வேண்டும் என அனைத்து ஊழியர்களையும் இந்த மாநில செயற்குழு கேட்டுக் கொண்டது.

8. ”அம்பேத்கார்-125” கருத்தரங்கினை சிறப்பாக நடத்திய நீலகிரி, கோவை(திருப்பூர்), மதுரை, பாண்டிச்சேரி, கும்பகோணம், திருச்சி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களுக்கு பாராட்டுதல்களை தெரிவித்துக் கொண்ட மாநில செயற்குழு, இதர பகுதிகளிலும் இந்த கருத்தரங்கினை உடனடியாக நடத்திட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டது.

9. சென்னை கூட்டுறவு சங்கத்தில் சாதாரணக் கடனுக்கு உயர்த்தப்பட்ட வட்டியை குறைக்க வேண்டும், கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான 88 ஏக்கர் நிலத்தை நிலமாகவே ஊழியர்களுக்கு பிரித்துக் கொடுக்க வேண்டும், RGB கூட்டத்தில் எழுப்பப்பட்ட சந்தேகங்களை தீர்க்கும் வண்ணம் SCHEDULE கொடுக்க வேண்டும், THRIFT FUNDக்கான வட்டி விகிதத்தை RGB கூட்டத்தில் எடுத்த முடிவின் அடிப்படையில் உயர்த்த வேண்டும், மற்றும் 2014-15ஆம் ஆண்டுக்கான DIVIDENDஐ உடனடியாக வழங்க வேண்டும் ஆகிய கோரிக்கைகளுக்காக நடைபெற்ற போராட்டங்களில் பங்கேற்ற தோழர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதோடு, அடுத்த கட்ட போராட்டத்தை விரைவில் நடத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டது.

10. 7ஆவது உறுப்பினர் சரிபார்ப்பில் தமிழகத்தில் நமது சங்கம் முதன்மை சங்கமாக வருவதற்காக திட்டமிட்டு செயல்பட வேண்டும். இதற்காக திட்டமிட மார்ச் மாதத்தில் அனைத்து மாவட்ட சங்கங்களும் விரிவடைந்த மாவட்ட செயற்குழுக்களை நடத்த வேண்டும். நாம் பெரும்பான்மையாக உள்ள மாவட்டங்களிலும் நமது வாக்கு எண்ணிக்கையை அதிகரிக்க சிறப்பு கவனம் எடுக்க வேண்டும். சிறப்பு கிளைப் பொதுக்குழுக்களைக் கூட்டி அதிலும் நாம் விவாதிக்க வேண்டும். நமது உறுப்பினர்களையும் அனைத்து ஊழியர்களையும் வீடுகளுக்கு சென்று சந்தித்திட திட்டம் இட வேண்டும். நமது சக்தி குறைவாக உள்ள மாவட்டங்களில் கீழ்கண்ட மாநில சங்க நிர்வாகிகள் பொறுப்பாக தங்கி இருந்து பணியாற்றுவது என்கின்ற ஆலோசனைகளையும் முன்வைக்கின்றோம். நமது சங்கத்தில் பல ஆண்டுகாலம் பணியாற்றி சமீபத்தில் பணி ஓய்வு பெற்று இன்றும் நமது இயக்கத்துடன் இணைந்து பணியாற்றி வருகின்ற முக்கிய தோழர்களையும் மாவட்டங்களின் தேவைக்கேற்ப பயன்படுத்த வேண்டும்.

| வ. எண் | மாவட்டம் | தோழர்கள் |
|---|---|---|
| 1 | திருநெல்வேலி | தோழர் P.இந்திரா ACS |
| 2 | காரைக்குடி | தோழர் C.பழனிச்சாமி AGS TNTCWU |
| 3 | வேலூர் | தோழர் K.சீனிவாசன் CT, தோழர் C.ஞானசேகரன் Ex.DS |
| 4 | திருச்சி | தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் CS |
| 5 | தஞ்சாவூர் | தோழர் R.மகேந்திரன் CAT, தோழர் S.நடராஜா ACS AIBDPA |
| 6 | கும்பகோணம் | தோழர் M.முருகையா ACS, தோழர் S.நடராஜா ACS AIBDPA |
| 7 | கடலூர் | தோழர் S.செல்லப்பா AGS |

இந்த மூன்றாண்டு காலத்தில் நமது மத்திய சங்கம் செய்திட்ட சாதனைகளோடு தமிழகத்தில், நமது மாவட்டங்களில், கிளைகளில் நாம் நடத்திய இயக்கங்கள், தீர்த்து வைத்த ஊழியர்களின் பிரச்சனைகள் ஆகியவற்றை அனைத்து ஊழியர்களிடமும் கொண்டு செல்வது அவசியம். இதற்காக நமது மத்திய சங்கம் வெளியிட உள்ள சாதனைக் கையேட்டை தமிழில் மாநில சங்கம் மொழி பெயர்த்து கொடுக்கும். அனைத்து ஊழியர்களிடமும் அதனை கொண்டு செல்ல வேண்டும். இது தவிர நமது தமிழகத்தில் மாநில சங்கம் எடுத்த முயற்சிகளையும் தொலை தொடர்பு தோழனில் சிறப்பிதழாக வெளியிடப்படும். இவற்றுடன் பல சுற்றறிக்கைகளையும் மாநில சங்கம் வெளியிடும். இத்துடன் நமது மாவட்டங்களில் தீர்க்கப்பட்ட பிரச்சனைகளையும் உள்ளடக்கி மாவட்ட சங்கங்களும், கிளை சங்கங்களும் பல சுற்றறிக்கைகளை வெளியிட வேண்டும்.

11. சர்வதேச மகளிர் தினமான மார்ச்-8, BSNL CCWF அமைப்பு தினமான மார்ச் 15, BSNL ஊழியர் சங்க அமைப்பு தினமான மார்ச்-22, பகத்சிங் நினைவு தினமான மார்ச்-23, அம்பேத்கார் பிறந்த தினமான ஏப்ரல்-14, மே தினம் ஆகியவற்றை அனைத்து பகுதிகளிலும், சிறப்பாக கொண்டாடிட வேண்டும் என மாநில செயற்குழு கேட்டுக் கொண்டது.
12. 7ஆவது உறுப்பினர் சரிபார்ப்பிற்காக ஒவ்வொரு உறுப்பினரிடம் இருந்தும் பிப்ரவரி மாத ஊதியத்தில் தலா ரூ.100/- பெற்று மாநில சங்கத்திற்கு அனுப்பிட வேண்டும்.
13. அகில இந்திய அளவில் வரும் சார்பாளர்களின் வசதிக்கு ஏற்ற வகையில் BSNL ஊழியர் சங்கத்தின் 7ஆவது அகில இந்திய மாநாட்டை வெகு சிறப்பாக சென்னையில் நடத்துவது என தமிழ் மாநில செயற்குழு ஏகமனதாக முடிவு செய்துள்ளது.

வெகு சிறப்பாக நடைபெற்ற இந்த மாநில செயற்குழுவில் கலந்துக் கொண்ட அனைத்து தோழர்களுக்கும், மாநில அமைப்பு செயலாளர் தோழர் A.அண்ணாமலை நன்றி கூறி கூட்டத்தை முடித்து வைத்தார்.

மாநில செயற்குழுவின் முடிவுகளை முழுமையாக நிறைவேற்றுவோம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,



**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**